செ.வெ.எண்: 239 நாள்: 21.03.2020

**பொதுமக்கள் தாமாகவே முன்வந்து நாளை காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஊரடங்கு உத்தரவை பின்பற்றி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.**

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

---

பொதுமக்கள் தாமாகவே முன்வந்து நாளை காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஊரடங்கு உத்தரவை பின்பற்றி ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாடு முழுவதும் கொரோனா பரவலை தடுக்கும் வகையில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவுறுத்தலின் படி நாளைய தினம் (22.3.2020) நாடுதழுவிய சுய ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நாளை காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை பொதுமக்கள் தாமாகவே முன்வந்து ஊரடங்கு உத்தரவை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே நாளையதினம் அரசு ஊழியர்கள், ஊடகத்தினர், கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளில் பணிபுரிபவர்கள் தவிர பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே செல்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

பொதுமக்களுக்கு தேவையான உணவு, காய்கறிகள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவே பொதுமக்கள் யாரும் முன்கூட்டியே பொருட்கள் வாங்கி வைப்பதை தவிர்க்க வேண்டும். இதேபோன்று கொரோனா வைரஸ் குறித்து தேவையற்ற வதந்திகளை நம்ப வேண்டாம்.

பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாளையதினம் நடைபெறும் சுயமுழு ஊரடங்கில் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**